தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை

1989 மே 4, வியாழக்கிழமை.

சித்திரை 21, சுக்ல—திருவள்ளுவர் ஆண்டு 2020.

சென்னை செயின்ட் ஜார்ஜ் கோட்டையிலுள்ள சட்ட மன்றப் பேரவை மண்டபத்தில் காலை 9-00 மணி அளவில் மாண்புமிகு பேரவைத் தலைவர் டாக்டர் மு. சாத்தையா என்கிற தமிழ்க்குடிமகன் அவர்கள் தலைமையில் பேரவை கூடியது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் :

'' செய்வானை நாடி வினைநாடிக் காலத்தோடு
எய்த உணர்ந்து செயல்.''

ஒரு செயலைச் செய்து முடிக்கக்கூடியவனது தன்மையை ஆராய்ந்து, செயலின் தன்மையையும் ஆராய்ந்து, தக்க காலத்தோடு பொருந்தி வருகின்றதா என்று பார்த்து உணர்ந்து செயற்பட வேண்டும்.

1. வினாக்கள்-விடைகள்

உடுக்குறியிட்ட வினாக்கள்

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

நாங்குநேரித் தொகுதியில் சிப்காட் மூலம் தொழிற்பேட்டை அமைத்தல்.

189. (*வினா எண். 366) திரு. ஆச்சியூர் எம். மணி மாண்புமிகு முதல் அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

நாங்குநேரி தொகுதியில் சிப்காட் மூலம் தொழிற்பேட்டை அமைக்க அரசிடம் திட்டம் உள்ளதா ?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : தலைவர் அவர்களே, நாங்குநேரித் தொகுதியில் சிப்காட் மூலம் தொழிற்பேட்டை அமைக்க அரசிடம் திட்டம் ஏதும் இப்போது இல்லை.

தமிழக அரசுக்குச் சொந்தமான ஹெலிகாப்டர்.

190—(*வினா எண். 370) திரு. சா. பீட்டர் ஆல்போன்ஸ் : மாண்புமிகு முதல் அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழக அரசுக்குச் சொந்தமான ஹெலிகாப்டர் பெங்களூருக்கு பழுது பார்ப்பதற்காக அனுப்பப்பட்டுள்ளதா ?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன ?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : தலைவர் அவர்களே,

(அ) ஆம் ;

(ஆ) நமது அரசுக்குச் சொந்தமான ஹெலிகாப்டர் எடை போடவும் மற்றும் சிறுச் பழுதுகளைச் சரி செய்யவும் பெங்களூரிலுள்ள Hindustan Aeronautics Limited என்ற நிறுவனத்திற்கு அனுப்பப்பட்டது. எடைபோடுதல் மற்றும் பழுதுகள் சரி செய்யப்பட்டு ஹெலிகாப்டர் மீண்டும் சென்னைக்கு கொண்டு வரப்பட்டுள்ளது.

திரு. சா. பீட்டர் ஆல்போன்ஸ் : மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, அந்த விமானத்தைப் பயன்படுத்துவதற்குச் சரியான நிறைய சந்தர்ப்பங்கள் இல்லாத காரணத்தால் அதை விற்கப் போவதாக மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் சொல்லியதாக ஞாபகம். அதைப்போன்ற கருத்து ஏதாவது அரசுக்கு இருக்கிறதா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : தலைவரவர்களே, அது கிட்டத்தட்ட, அதிகாரிகள், சில முக்கிய நபர்கள் பயன்படுத்துவதற்காக 67 முறை, மீட்புப் பணிகளுக்காக 22 முறை, மற்றும் மலர் தூவுதல் போன்ற பணிகளுக்காக 16 முறை பயன்படுத்தப்பட்டு இருக்கிறது. இப்போது அதனுடைய ம ாரிப்புச் செலவு ஆண்டு ஒன்றுக்கு 15 லட்சம் ரூபாய் என்ற